படியான அளவிற்கு விட்டு வைக்கக்கூடாது என்பதிலும் மிக அக்கறையுள்ளவன் என்ற வகையில் கண்டிப்பாக, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாத வண்ணம், தடுக்க வேறு குறிப்பிட்ட வகையில் இதற்கென்று நடவடிக்கைகள் எடுக்க, திட்டம் தீட்ட நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கமே போதும், நடவடிக்கை எடுக் கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதோடு விட்டுவிடுங்கள்.

மாண்புமிகு திரு. க. உசொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, விதி 42-ன் கீழ் கிளாரிபிகேஷன் அனுமதிக்கப்படுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு பின் அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டிய அவசியமில்லை என்ற நிலைமையிலே இதற்கு என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

2. கவன ஈர்ப்பு.

சென்னை நகரில் காலரா நோய் பரவி வருவது குறித்து

மாண்மிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 41-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியினைக் குறித்து கவன ஈர்ப்பு கொண்டு வருவார்கள்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, "சென்னை நகரத்தில் காலரா நோய் பரவி வருவதன் காரணமாக மக்களிடையே மிகுந்த பீதி ஏற்பட்டுள்ளதால் அதைத் தடுக்க அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்து" என்ற பொருள்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

1977 ஜூலை 14]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை மாநகரில், கடந்த இரண்டாண்டுகளில் காலரா நோயால் பாதிக்கப்பட்டோர், இறந்தோர் எண்ணிக்கை பின் வருமாறு :—

	பாதிக்கப்பட்டோர்.	இறந்தோர்.
1975	1,389	27
1976	302	11
1977 (ஜூன் முடிய)	166	4

1975 ஆம் ஆண்டில் காலரா நோயால் பாதிக்கப்பட்டோர், மற்றும் இறந்தோர் ஆகியவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்பொழுது 1976 ஆம் ஆண்டிலும், 1977 ஆம் ஆண்டிலும் (ஜூன் திங்கள் முடிய) பாதிக்கப்பட்டோர், மற்றும் இறந்தோர் ஆகியவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பது புலப்படும். சென்னை மாநகரின் 30 இலட்சம் மக்கள் தொகையுடன் கணக்கிடும்போது, 1977 ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை மிகக் குறைவு என்பதும் நன்கு விளங்கும். மேற்படி நோய் பரவாமல் இருப்பதற்கு மாநகராட்சி மேற்கொண்டுள்ள கடும் தடுப்பு நடவடிக்கைகளாவன : (1) பாதிக்கப்பட்ட இடங்களில் காலராத் தடுப்பு ஊசி குத்துதல், (2) குடி தண்ணீரில் குளோரின் செலுத்தி சுத்தப்படுத்துதல், (3) கிணறுகளில் குளோரின் மருந்து கலத்தல், (4) வழங்கப்படும் குடிநீரில் தங்கியுள்ள குளோரின் பொருளின் அளவைச் சோதித்தல், (5) ஈக்களை ஒழிக்கும் நடவடிக்கைகள், (6) சுற்றுப்புறச் சுகாதாரத் தூய்மையைக் காத்தல், முதலியன 1977-ம் ஆண்டு தொடக்கத்திலிருந்து ஜூன் மாதம் முடிய, 37,053 தடுப்பு ஊசிகள் போடப்பட்டிருக்கின்றன. மேலே சொன்ன நடவடிக்கைகளின் விளைவால்தான், காலரா நோய் எந்த ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் ஏற்படவில்லை; மாறாக, மாநகரின் ஒரு சில பகுதிகளில் இங்கொன்றும் அங்கொன்றுமாகத்தான் கண்டுள்ளது. ஆகவே, சென்னை நகர மக்கள் இந்நோயைப்பற்றி பீதியடையத் தேவையில்லை.

திரு. துரை முருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் விளக்கத்தை நான் கேட்டேன். இந்த மாநகராட்சியின் ஒரு பிரிவுதான் இந்த காலரா நோய்த் தடுப்பதைப்பற்றி நடவடிக்கை எடுப்பதாக அறிகிறேன்.

அந்தப் பிரிவில் போதிய பணம் இல்லை என்ற காரணத்தாலே அவர்கள் சரிவர இந்தத் தடுப்பு ஏற்பாடுகளைச் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். இந்த காலரா நோய் ஓரிருவருக்கு வந்தால் உடனடியாக வேகமாகப் பரவக் கூடியதாகும். ஆகவே பணம் இல்லாத நிலையில் அந்தப் பிரிவு சரியாகச் செயல்படவில்லை என்பது உண்மையா? அப்படியானால் அதிகமான பணத்தை அவர்களுக்குக் கொடுத்து அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல எண்ணத்தை நான் வரவேற்கிறேன். எந்த வகையில் அதை நிறைவேற்ற வேண்டுமோ அதற்கு ஏற்ப நிச்சயம் நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

(3) ஒழுங்குப் பிரச்னை.

வினா நேரம் இல்லாதிருப்பது குறித்தும் பல வினாக்கள் திருப்பி யனுப்பப்பட்டமை குறித்தும்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதைப்பற்றிக் கேட்கிறீர்கள்?

திரு. என். கிட்டப்பா: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவரவர்களே, இந்தப் பேரவையில் வழக்கமாக காலை 9 மணி முதல் 10 மணி வரையில் கேள்வி நேரம் ஒதுக்கப்படுவது உண்டு. ஆனால் பல மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகளைத் தந்திருந்தும், குறிப்பாக என்னைப் பொறுத்தவரையில் இதுவரையில் 300 கேள்விகள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் முதல் நாளே அதைப்பற்றிச் சொல்லியாகிவிட்டது. நீங்கள் சொல்லப் போவதைச் சொல்லுங்கள். அதைத்தான் சொல்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறோம், ஒன்றுகூட வரவில்லை என்று சொல்கிறீர்கள்.

திரு. என். கிட்டப்பா: இந்தக் கேள்விகள் வாராதது மட்டுமல்ல, பல கேள்விகள் வேண்டுமென்றே திருப்பி அனுப்பப் படுகின்றன என்பதை. . .